PHONE No. 85630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 153

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

REGD. No. [illegible]

சந்தா விபரம்:

உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0

வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: கார்த்திகை 24உ புதன் (9—12—53) ☆ ☆ ☆ வெளியூர்: கார்த்திகை 25உ வியாழன் (10—12—53)

காமராஜர் தலைவர் பதவி ராஜினமா?

★★★★★★★★★★★

இவருக்குந் தெரிகிறதே!

★

"இந்திமொழி, பேசுவதற்கு மட்டும் தகுதியுள்ளதே தவிர, இலக்கிய வளம் படைத்த மொழியல்ல; மற்ற மொழிகளில் இலக்கியங்கள் மிகுந்துள்ளன."

—மதுரையில் ராஜாராம் சாயபு
'த. நா.': 8—12—53

★★★★★★★★★★★

இரெ. இளம்வழுதி

★

நம் தி. மு கழகத் தோழர் சடலூர் என். டி., இரெ இளம் வழுதி அவர்கள் (வழக்கறிஞர்) தூத்துக்குடி வழக்கை நடத்தி வரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தற்சமயம் திருநெல்வேலியில் தங்கி, தூத்துக்குடி வழக்கு நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறார்.

அவர் முகவரி: இரெ. இளம்வழுதி, அட்வகேட், நெ 14 கெலலே லாட்ஜ், திருநெல்வேலி.

மறைவு

தோழர் மீ. க இளமுருகு-பொற்செல்வி அவர்களின் தாயார் திருவாட்டி ஈசுவாவடிவு அம்மாள் 6—12—53ல் இயற்கை எய்தி விட்டார்கள். நமது அனுதாபம் உரித்தாகுக. (ஆ—ர்)

நேரு போக்கில் அதிருப்தி

புது டில்லியிலேயே தங்கி இருப்பதின் இரகசியம்?

மூவர் தூதுக்குழுவால் பயன் உண்டா?

(நமது ராஜீய நிருபர்)

புது டில்லி, டிச. 9—

பெரும்பாலான சட்டசபை உறுப்பினர்களுக்கும்—சி. ஆர் எதேச்சாதிகாரப் போக்கிற்கும் ஏற்பட்ட சிக்கலில், ஆச்சாரியாருக்குச் சாதகமாக காங்கிரஸ் பாராளுமன்றக் குழுத் தலைவர் என்ற முறையில் பண்டித நேரு கொடுத்த தீர்ப்பில், காமராஜருக்கு அதிருப்தி ஏற்பட்டு இருப்பதாகவும், எந்த முகத்தைக் கொண்டு தமிழ்நாடு திரும்புவது என்ற தன்மான உணர்ச்சி காமராஜர் உள்ளத்தைக் குடைவதாகவும், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களின் விருப்பப்படி ஆச்சாரியாரை அகற்ற முடியவில்லையானால், தாம், காங்கிரஸ் தலைமைப் பதவியை ராஜினமா செய்துவிடத் தயாராயிருப்பதாகவும், காமராஜர் பண்டித நேருவிடம் வெளிப்படையாகக் கூறினதாகவும் விஷயமறிந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யூகிக்கிறார்கள். காமராஜர் சென்னை திரும்பாமல் இன்னமும் புது டில்லியிலேயே தங்கியிருப்பது இந்த யூகத்துக்கு அரண் செய்வதாக இருக்கிறது.

பண்டிதரை நேரில் கண்டு அமைச்சர் ஆச்சாரியாருக்குக் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களிடம் உள்ள வெறுப்பை விளக்கமாகக் கூறி, கொடுத்தத் தீர்ப்பை மாற்ற வேண்டுமென்று வற்புறுத்த காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களான டி. ஜி கிருஷ்ணமூர்த்தி, எஸ் பஞ்சாட்சரம், ஏ. எம். சம்பந்தம் ஆகிய மூவரும் வருவதை காமராஜர் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார் என்றும் தெரியவருகிறது. இதுவும் நேருவின் தீர்ப்பில் காமராஜருக்குள்ள அதிருப்தியை விளக்குவதாகவே இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

நேருவின் போக்கு இங்குள்ள காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக்கூட மனக்கசப்பை உண்டாக்கி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்க்காருக்கு உணவுத்துறை ஊழியர் இறுதி எச்சரிக்கை!

பம்பாயில் 15,000 சர்க்கார் ஊழியர் வேலை இழப்பர்

அகமதாபாத், டிச 7—

பம்பாய் சர்க்காரின் உணவுக் கொள்கையில் திட்டமிடப்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாக சர்க்கார் உணவுத் துறையில் பணிபுரியும் சுமார் 15 000 பணியாளர்கள் பாதகமடைக்கூடும் என்று கருதப்படுகிறது.

அவர்கள் பிரதிநிதிகள் இங்கு ஒன்றுகூடி, இம்மாதம் 25-ந் தேதிக்குள் சர்க்கார் ஆதரவான பதில் தர வேண்டுமென்ற ஒரு இறுதி எச்சரிக்கையை அனுப்பியுள்ளனர்.

கட்டுப்பாட்டைக் கொண்டு வரும் புதிய உணவுக் கொள்கையின்படி பாதகமடையும் ஆயிரக் கணக்கான ஊழியர்களுக்கு வேறு அலுவல்களை தேடித்தர வேண்டும் என்ற கோரிக்கை அதில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதை, பிரதமர் மொரார்ஜியை நேரில் கண்டு விளக்குவதற்கும், பெண் ஊழியர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று சங்கத்தின் செயலாளர் தலைமையில் உருவாக்கப்பட்டது.

கோரிக்கையில் வெற்றி காண சங்கத்தின் செயலாளர் உண்ணாவிரதம் இருப்பது என்ற தீர்மானம் விவாதத்தோடு முடிவு செய்யப்படாமல் நின்றது.

நாகர் சுதந்திர கோரிக்கை— நேருவின் கோபம்!

விவரம் கோரி அஸ்ஸாம் முதல்வருக்குக் கடிதம்

கௌஹாத்தி, டிச. 8—

மலை ஜாதியினர்களான நாகர்களின் தனி நாடு கோரிக்கைக்கு இணைச்சிக்கு அஸ்ஸாம மக்களின் ஆதரவு திரட்ட நாகர்களின் கலவெண்ணத் தூதுக் குழு ஒன்று அஸ்ஸாம் மாநிலத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வருவதைக் கண்டு, பண்டிதநேரு மிகமிகக் கோபப்பட்டு இருக்கிறார் என்று நம்பிக்கையான செய்தி தரப்படுகிறது.

இதுபற்றிய முழுவிவரங்களையும் அறிவிக்குமாறு கேட்டு, கடிதம் ஒன்றை அஸ்ஸாம் பிரதமருக்கு அவர் எழுதி இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

நாகர்களின் தனி நாடு கோரிக்கையை எப்படி அஸ்ஸாம மக்கள் கருதுகிறார்கள் என்றும் நேரு கேட்டிருக்கிறாராம்.

சமீபத்தில் அஸ்ஸாம் முதல அமைச்சர் நாகர் பகுதிகளுக்குப் போய் வந்தும், தனி நாடு கோரிக்கையில் ஈடுபட்டுள்ள நாகர்களுக்கு மனமாற்றம் ஏற்படாதது பற்றியும் நேரு அறிய முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறார்.

நகரசபை தேர்தலில் காங்கிரஸ் ஏகபோகம் சரிந்தது!

—— (:) ——

இருபது இடங்கள் பறிபோயின!

போட்டியிட்ட இரு பொதுவுடமையினருக்கும் வெற்றி இல்லை!

மைசூர், டிச 8—

கடந்த பத்து ஆண்டுகளாக மைசூர் நகரசபை, காங்கிரஸ் கட்சியின் ஏகபோக ஆதிக்கத்தில் இருந்துவந்தது. நியமன இடங்களைத் தவிர எல்லா இடங்களையுமே காங்கிரசே கைப்பற்றிக்கொண்டு வந்தது.

இப்பொழுது நடந்தத் தேர்தலில் போட்டியிட்ட பல காங்கிரஸ் நகரசபை உறுப்பினர்களும், இப்பொழுதுள்ள தலைவரும், இன்றைய கட்சித் தலைவரும் படுதோல்வியுற்றனர்.

மொத்தமுள்ள 40 இடங்களுக்கு 9) 000 ஆகும். இதில் வாக்களித்தவர்கள் தொகை 47,720 ஆகும்

35 இடங்களுக்குத்தான் காங்கிரஸ் போட்டியிட்டது. அதில் 20 இடங்களைத்தான் பிடிக்க முடிந்தது.

எக்கட்சிச் சார்புமற்ற 11 உறுப்பினர்களும், பி-சோ கட்சியைச் சார்ந்த 9 உறுப்பினர்களும் மீதமுள்ள 20 இடங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

தேர்தலில் போட்டியிட்ட இரு பொதுவுடமையினருக்கு வெற்றி கிடைக்கவில்லை.

மொத்தமுள்ள வாக்குகள்

குழாய்க் கிணறுகள்

புது டில்லி, டிச. 8—

அடுத்த ஆண்டில், நாட்டின் பல பாகங்களில் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தும் திட்டத்தை இந்திய சர்க்கார் தயாரித்துள்ளது. இதற்காக ரூ 1,20 00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை, பெப்சு, பீகார் உள்பட 16 ராஜ்யங்களில் இக்குழாய்க் கிணறுகள் தோண்டப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

★ டிசம்பர்—10-ல்! ★

தி. மு. கழக துணைச் செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன், நாளை காலை 8 மணிக்கு மேல், சென்னை சிறையிலிருந்து விடுதலை பெறுகிறார். சிறை வாயிலில் அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்படும்.

கழகத் தோழர்கள் அனைவரும் காலை 8 மணிக்கு சிறைவாயிலுக்கு வந்து சேரவேண்டுகிறோம்.

—தி. மு. கழகத் தலைமை நிலையம், சென்னை.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

விற்பனை வரியை எதிர்த்து வேலை நிறுத்தம்

—— [o] ——

பருத்தி வியாபாரத்திற்கு இடைஞ்சல்

நாகபுரி, டிச 7—

பருத்தி உற்பத்தியாளர்களும், தரகர்களும், ரூபாய்க்கு ஆறு பை வீதம் மாநில சர்க்கார் விதித்துள்ள விற்பனை வரியை எதிர்த்துக் கடந்த ஏழு நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இதனால் பருத்தி வியாபாரம் பாதிக்கப்பட்டு இருக்கிறது.

இதன் பலனாக பேரார் நான்கு மாவட்டத்திலும், நாகபுரி, வார்தா மாவட்டங்களிலும் உள்ள பருத்திச் சந்தைகள் மூடப்பட்டிருக்கின்றன.

போர்த்துகீசியப் படைகளின் பலம்

புதுடில்லி, டிச. 8—

"கோவாவில், போர்த்துகீசிய இராணுவமான டாங்கிகள், பீரங்கிகள் முதலிய சாதனங்களும், படையினர் முதலியன பலப்படுத்தப்பட்டிருப்பதாக நமக்கு தகவல்கள் வந்திருக்கின்றன." என்று, வெளி விவகார மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி கூறியுள்ளார்.

‘நம் நாடு’ ஏஜண்டுத் தோழர்கட்கு

★

‘நம் நாடு’ ஏஜண்டுத் தோழர்கள் யாவருக்கும் நவம்பர் மாதப் பட்டியல் 1—12—53-ல் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. நவம்பர் மாதயில் பாக்கி கூடுதல் (டிபாசிட் தொகை) முன் கட்டியிருப்பதைவிட, அதிக பாக்கி ஏற்பட்டிருப்பதால், இதுவரை பாக்கி அனுப்பாதவர்கட்கு, ‘நம் நாடு’ இதழ்கள் அனுப்புவதை நிறுத்திவைத்திருக்கிறோம். மற்றும் 10—12—53-க்குள் மற்ற ஏஜண்டுகளிடமிருந்தும் பட்டியல் பாக்கி வராவிட்டால், ‘நம் நாடு’ அனுப்புவது நிறுத்தப்படும் என்பதை அறிவிக்க வேண்டுகிறோம். 2, 3 மாதப் பட்டியல்கட்கும் சேர்த்தே ரூபாய் அனுப்பிவைக்க விரும்பும் தோழர்கள் முன்பணம் 2, 3 மடங்கு அதிகமாக அனுப்பிவைக்க வேண்டுகிறோம். ‘ரூபாயும் உரிய காலத்தில் அனுப்பிவைக்க முடியவில்லை; ‘நம் நாடு’ அனுப்புவதை மட்டும் நிறுத்தாமல் அனுப்பிக்கொண்டே இருக்க வேண்டும்,’ என்று கேட்கும் ஏழு நாள் இதழை மட்டும் படிவில்லை என்பதையும் ஒவ்வொரு ஏஜண்டும் விரும்புவது போல் கணக்கு கொடுப்பதும் சாத்தியமில்லை என்பதையும், நாட்குறிப்பிடும் தேதிக்குள் ரூபாய் அனுப்பிவைக்க வேண்டியது முக்கியம் என்பதையும் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர், ‘நம் நாடு’
இராயபுரம், சென்னை—13.

நம் நாடு

தி.மு.கழக இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 9—12—1953 புதன்

பொய் சொன்னாலும்!

‘பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்’ என்று ஒரு மொழி உண்டு. அமைச்சர் ஆச்சாரியாருக்குள்ள பகைமோகம், எல்லா வரம்பையும் கடந்துவிடத் தூண்டுகிறது. எல்லா வேலிகளையும் முறையாகவோ, முறைகேடாகவோ அவர் கடந்துவிட்டாலுகூட, பொய் சொல்லும் வகையிலாவது பிறர் நம்பும்படி கொஞ்சம் பொருத்தமாகச் சொல்ல, அவர் பழகிக்கொள்வது நலது. அப்பொழுது தான் பொதுமக்களுக்கு அவர் உரை நம்பிக்கை யூட்டுவதாக இருக்கும்.

அதிக போதா விஷம் என்று அவரது சீட கோடிகளால் வியந்து ஓதப்படுகிற அமைச்சர் ஆச்சாரியார், அப்படி என்ன பொருந்தாதப் பொய்யைக் கூறினார் என்று பார்ப்போம்:—

“தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் காமராசர் மூலம் எனக்கு டாக்டர் பி. வரதராசலு நாயுடு சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பலருடைய கையொப்பம் அடங்கிய ஒரு மனுவை அனுப்பியிருப்பதாக சில பத்திரிகைகளில் வெளியானதொரு அறிக்கையை நான் பார்த்தேன். இந்த மனுவில் சட்ட சபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு கட்சித் தலைவர் சி. ராசகோபாலாச்சாரியாரிடம் நம்பிக்கை இல்லையென்று தெரிவிக்கிறப்பதாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தியைப் பார்த்து நான் வியப்படைந்தேன். ஏனெனில், எனக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது.”

“அத்தகைய மனுவை என்னிடம் கொடுக்கப்படவோ, அ. இ. கா. கமிட்டிக்கு அனுப்பப்படவோ இல்லை. இம்மாதிரியான பிரசாரம் செய்ய முயற்சி எதுவும் செய்வதும், முக்கியமாக இத்தகைய செய்தியைப் பிரசாரத்திற்காக பத்திரிகைகளுக்கு அனுப்புவதும் மிகவும் முறையற்றதாகும்.”

“நான் இதுபற்றி காமராஜரை விசாரித்தேன். டாக்டர் வரதராஜுலு நாயுடுவிடமிருந்து வராவிட்டாலும் அத்தகைய கடிதமொன்று தமக்கு வந்திருப்பதாகவும்; ஆனால் அதனை எனக்கு அனுப்புவது அவசியமென்றோ அல்லது விரும்பத்தக்கதென்றோ தாம் நினைக்கவில்லை என்றும், காமராஜர் என்னிடம் தெரிவித்தார்.”

“சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவரான சி. இராசகோபாலாச்சாரியார் மீது, நம்பிக்கையின்மையைத் தெரிவிக்க செய்யும் எந்த முயற்சியும் கண்டிக்கத் தக்கதாகும்.”

“இதனால் கட்சிக்கும், காங்கிரசுக்கும், சென்னை மாநிலத்திற்கும் தீங்குதான் விளையும்.”

“மத்திய பார்லிமெண்டரி போர்டு இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசித்தது. இது பற்றிய டாக்டர் வரதராஜுலுவின் செயல் மிக்க முறையற்றதென்று போர்டு அபிப்பிராயப்பட்டது.”

“காங்கிரஸ் சட்டசபைக் கட்சி உறுப்பினர் எவரும் கட்சிக்குள் பிளவை உண்டாக்க முயற்சிக்கக் கூடாது.”

இதிலிருந்து இரு உண்மைகள் விளக்கமாகத் தெரிகின்றன.

ஆச்சாரியார்மீது நம்பிக்கை இல்லை என்று, பெரும்பாலான சட்டசபை உறுப்பினர்கள் கையொப்பமிட்ட அறிக்கை ஒன்றை பண்டிதர் நேருவுக்கு டாக்டர் வரதராஜுலு அவர்கள் அனுப்பி இருக்கிறார்.

பண்டிதரின் மனோபாவம் தெரிந்த காமராஜர், அந்த அறிக்கையை நேருவிடம் கொடுப்பதால் பயன் ஒன்றும் விளையப் போவதில்லை என்று, கொடுக்காமல் நிறுத்திக் கொண்டார்.

ஒன்றும் தெரியாதவர்போல பண்டிதர் நேரு மக்கள் வதும், பத்திரிகைகளில் செய்தி வந்ததற்கு ‘முறை கேடு’ என்று கூறி நேரு கோபிப்பதும், டாக்டரைக் கண்டிக்கக் கிளம்புவதும், தலைவர் பதவிக்கேற்ற நடுநிலை புத்தி நேருவுக்கு அறவே கிடையாது என்பதைத்தான் விளக்கமாக்குகிறது.

முன்கூட்டியே பத்திரிகைக்குச் செய்தி கொடுத்தது ‘முறைகேடு’ என்று சொல்லுவதாக இருந்தால், அப்படிச் செய்தி கொடுத்தவர்கள் இவர்தான் என்று திட்ட வட்டமாகத் தெரிவதற்குள்ளாக டாக்டர் வரதராஜுலுவை கண்டித்துப் பேசி, தீர்மானம் போடக் கிளம்புவதை எவர் செய்வதாக இருந்தாலும் ‘அவசர புத்தி’ ‘முறை கேடு’ என்றுதான் எவரும் கூறுவர். அதைப் பண்டிதர் செய்வதாக இருந்தாலும் அது குற்றம் குற்றம்தான்.

குறிப்பிட்ட செய்தி குறிப்பிட்டவர்கள் கைக்குபோய் சேருமுன், குறிப்பிட்ட ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளியிடுவது ‘முறை கேடு’ என்று பண்டிதர் நம்புவது உண்மையானால், அதைக் ஆச்சாரியார் செய்தபோது, வெளிப்படையாக இல்லையானாலும், மறைமுகமாக, ஜாடை மாடையாகவாவது பண்டிதர் கண்டித்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் பண்டிதருக்கு ‘முறை-முறைகேடு’ பற்றிய அரிச்சுவடியாவது தெரியும் என்று பொது மக்கள் நம்ப வழி பிறக்கும். அதுவுமல்லாமல், பண்டிதரின் ‘நியாய புத்தி’யையும் தெரிந்துகொண்டு மற்றவர்கள் பாராட்டவும் செய்வர்.

ஆச்சாரியார் போக்கில் கண்ட ‘முறைகேட்டை’ அன்று, கண்டும் காணாதவர் போல் இருந்துவிட்ட பண்டிதர், அவர் புரிந்தாரா இல்லையா என்பது ஐயத்திற்கிடமின்றி அறியப்படுவதற்குள்ளாகவே, முன்கூட்டியே செய்தி வெளியானதற்கு டாக்டர் மீது பழியை ஏற்றி டாக்டர் வரதராஜுலுவின் செயல், ‘முறை கேடு உடையது’ என்று கண்டித்துப் பண்டிதர் பேசுவதை நியாயம் என்று, எவ்வளவு காலத்துக்குத்தான் காங்கிரஸ் குட்டையில் ஊறிய மட்டைகளாக இருக்கப்போகிலும், கட்டுப்பாட்டில் நம்பிக்கை உடைய கண்ணியமான காங்கிரஸ் கட்சியினர் எவரும், ஒருக்காலும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பது திண்ணம்.

சி. ஆர் மீது நம்பிக்கையில்லை என்ற அறிக்கையை பண்டிதரிடம் சேர்ப்பிக்கும்படி, காமராஜரிடம் டாக்டர் கொடுத்தனுப்பியது உண்மை. காமராசர் கூறுவதுபோல, நேரில் சென்று அந்த அறிக்கையை டாக்டர் அவரிடம் கொடுக்காமல் இருக்கலாம். வேறு தமக்கு நம்பிக்கையான ஒருவர் வசம் டாக்டர் அதைக் கொடுத்தனுப்பி காமராஜரிடம் சேர்ப்பித்து இருக்கலாம். எனவே, நேரில் டாக்டர் ஒரு அறிக்கையை காமராசரிடம் கொடுத்தார் என்ற உண்மையை, காமராசர் கூறும் முழுப் பிடிப்பற்ற காரணத்தைக் காட்டி மறுத்துவிட முடியாது. இது, கொடுத்தனுப்பிய அறிக்கை விவகாரத்தை அப்படியே மறைத்துவிடவும் உதவாது இங்கு.

டாக்டர் கொடுத்த அறிக்கையை காமராசரிடமிருந்து கேட்காததற்கு முழுப் பொறுப்பேற்க வேண்டியவர் காமராசரே யாவார். இதைப் பெரிய தவறாகக் கொண்டு, காமராசர் மீது குறை கூறுவதற்கும் அங்கிருந்த சூழ்நிலை எவருக்கும் உதவுவதாக இல்லை. அவ்விருந்த சூழ்நிலை என்ன? அதற்கும் விளக்கம் நேருவின் அறிக்கையிலேயே வெட்ட வெளிச்சமாக இருக்கிறது. அதாவது:—

‘சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவரான சி. ராஜகோபாலச்சரி மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் எந்த முயற்சியும் கண்டிக்கத் தக்கதாகும்’ என்று பண்டிதர் அறிக்கை விளக்கம் தருகிறது.

தமிழ்நாட்டு மக்கள் முழுதும் ஒருங்கு திரண்டு ஆச்சாரியாரை எதிர்த்தாலும், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ஒருமித்து எதிர்த்தாலும் சென்னை சட்டசபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுமே கூடாது என்று கூறினாலும், ‘ஆச்சாரியார் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் எந்த முயற்சியும் கண்டிக்கத் தக்கதாகும்’ என்ற பிடிவாதத்தைப் பண்டித நேரு கொண்டிருக்கின்ற பொழுது, இதைச் சந்தேகத்திற்கிடமின்றி காமராஜர் நன்கு புரிந்துகொண்டிருக்கிறபொழுது, டாக்டர் வரதராஜுலு அறிக்கையை காமராஜர் இடத்தில் உள்ள வேறு எவர்தான் பண்டிதரிடம் கொடுக்க ஒப்புவர்—முன்வருவர்?

நாட்டு மக்களால் எவ்வளவு வெறுக்கத் தக்கவர்களாக இருந்தாலும், பார்ப்பனக் குடியில் பிறந்தவர்களாக மட்டும் இருந்துவிட்டால், அவர்களுக்கு அகில இந்திய காங்கிரசின் தலைமை பீடம், எந்த நியாய நியாயங்களையும் கருதாமல், முறையில்லா முறையில் சென்றும் தாங்கிப் பிடிக்கும் என்பது, காங்கிரஸ் வரலாற்றில் சர்வ சாதாரண சம்பவங்களாகும்.

இந்த ஆரிய ஜோதி என்ன, இவரைக் காட்டிலும் ‘உலக உத்தமர்’ என்று புகழப்பட்ட காந்தியார், ஆச்சாரியாரைப் பொறுத்த சிக்கலில், ஆச்சாரியாரை வழி தவறிச் சென்று முன்னாள் ஆதரித்ததை எவர்தான் இதற்குள் மறந்துவிடுவர்? மற்றவர்களாலேயே மறக்க முடியாத அந்த அக்கிரமத்தை அதில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட காமராஜர் எப்படி மறந்துவிடுவார்? நிற்க,

திராவிடப் பெருங்குடி மக்கள் பெரும்பான்மையாகக் காங்கிரசில் சேர்ந்து, காங்கிரஸ் நிறுவனத்தைத் தமது கருத்துக் கேற்ப இயக்கச் செய்வதை எவர் தடுக்கிறார்கள் என்று, நம்மீது குறைபட்டு வந்த காங்கிரஸ் நலவர்கள், இந்தச் சம்பவத்திற்குப் பிறகாவது கண் திறப்பார்கள் என்று நம்புகிறோம்.

‘மத்திய பார்லிமெண்டரிபோர்டு இந்த விஷயத்தைப் பற்றி ஆலோசித்தது. டாக்டர் வரதராஜுலுவின் செயல் முறையற்றது என்று போர்டு அபிப்ராயப்பட்டது’ என்று பண்டிதர் அறிக்கை விளக்கம் தருகிறது.

“சென்னை விவகாரங்கள் காரியக் கமிட்டிமுன் கொண்டு வரப்படவோ, விவாதிக்கப்படவோ இல்லை,” என்று ஆச்சாரியார் முழு பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார்.

தலைவர் என்ற முறையில் பண்டிதர் நேரு, கமிட்டியில்

உழவுத் தொழிலுக்குக் கடன் உதவி

புதுடெல்லி, டிச 7—

விவசாய காரியங்களுக்கு ரிசர்வ் பாங்கி மேலும் ரூ 5 கோடி கடன் உதவி புரிவதற்கு வகை செய்யும் சட்டத் திருத்த மசோதாவை மக்கள் சபை விவாதித்தபோது உறுப்பினர்கள், “கிராமாந்திரக் கடன் வசதிகள் போதியபடி இல்லை,” என்று வலியுறுத்தினர் கடுத்தர கால நெடுங்கடன் கூடிய கடன்களைக் அதிகத் தொகை தரக் கொடுப்பதும்

‘ரூ 1,000, ரூ 5,000, ரூ 10,000 உயர் மதிப்புள்ள புதிய நோட்டுகளை வெளியிடச் சர்க்கார் யோசித்து வருகிறது இந்த மசோதா,” என்றார் உதவி நிதி அமைச்சர் குகா.

‘வர்த்தக நிலையங்கள், பாங்கிகள், கேட்டுக் கொண்டதற்கிணங்கவே, சர்க்கார் இத்தகைய நோட்டுகளை வெளியிட திட்டமிட்டுள்ளதாகவும், ஏனென்றாலும், 1946-ல் செல்லாதவையாக்கப்பட்ட நோட்டுகளை இம் மசோதா செல்லுபடியாக்காது’’ என்றும் சொன்னார், குகா.

இம்பீரியல் பாங்கியை தேசியமயமாக்க கோரியபோது, ‘அது, இப்போது இதுபற்றி பரிசீலனையிலிருக்கிறது என்பது உண்மைதான். அதனால் தேசிய மயமாக்கப்படும் என்று பொருளல்ல’’ என்று குகா பதிலளித்தார்.

விவசாயக் கடன் சட்டம் ஏன்?

சென்னை, டிச. 7—

விவசாய மந்திரி எம். பக்தவத்சலம் இன்று பத்திரிகை நிருபர்களிடம் விவசாய கடன் வாய்தா அவசரச் சட்டத்தை விளக்கினார்.

‘‘கால மழையின் தன்மையை விவசாயிகள் நன்கு அறிவர். தங்கள் நிலைமையைச் சமாளித்துக் கொள்வதற்கு அவகாசம் அளிப்பதற்காகவே அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது,’’ என்றார்.

கோளா மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

திருவனந்தபுரம், டிச 7—

ஒரு மாதத்திற்குப் பின், நேற்று மறுமுறையும் எம். ஜி. கல்லூரியில் மாணவர் ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

கல்லூரியிலிருந்து விலக்கப்பட்ட மாணவர்கள், கல்லூரிக்குள் புகுந்து கலவரம் விளைவித்ததாகவும், அதன்பின் போலீசார் வந்து சிலரைக் கைது செய்ததாகவும் தெரிகிறது. பிரின்ஸிபாலின் அறை முன் மறியல் செய்த மாணவர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மாணவர்கள் போலீசார் மீது கல் வீசியதால் அது சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு பதிவாகியுள்ளது.

விவாதிக்கப்படாத ஒரு விஷயத்தைக் குறித்து இவ்வளவு கடுமையான அறிக்கை வெளியிட அவசியமென்ன என்ற நியாயமான கேள்வி எழுகிறது. இதற்குத் தரப்படும் பதிலினால், ஆச்சாரியாரின் பொருந்தாப் பொய்யுரை இயற்கையாகவே அம்பலமாகிவிடுகிறது.

‘மனுவாகி ஒரு குலத்துக்கொரு நீதியை ‘மனிதப் பொதுவிதி’ என்று நம்பிவந்த சூழ்நிலையில் வளர்ந்த அமைச்சர் ஆச்சாரியாரிடம் ‘பொது அறநெறி’யை எதிர்பார்ப்பது பொருந்தாக் கூற்றே யாகும்.

தூத்துக்குடி சதி வழக்கு:

"போலீசிடம் கொடுத்த புகாரில் முழு விவரங்களைக் குறிப்பிடவில்லை"

"மாரிமுத்து தேவர், முத்துசாமி அய்யர் ஆகியோரை அப்புகாரில் காட்டவில்லை"

"கூட்டத்தினர் கூச்சலிட்டுக்கொண்டு வந்ததாகப் புகாரில் கூறவில்லை"

திருநெல்வேலி, டிச. 7—

தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை இன்று மீண்டும் ஸ்பெஷல் மாஜிஸ்திரேட் திரு சங்கர அய்யர் முன் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ள 62 தோழர்களுக்கு பதிலாக வேறு ஜாமீன்தார்கள் கொடுக்க அனுமதி அளிக்குமாறு எதிரிகள் செய்துகொண்ட மனுவை மாஜிஸ்திரேட் அனுமதித்தார். தங்கள் கோர்ட்டில் தினந்தோறும் ஆஜராக வேண்டி வருவதால் தங்கள் தொழிலுக்குப் பாதகமேற்படுவதாக 62 தோழர்களும் தெரிவித்தனர். டிச. 11-ம் தேதியிலிருந்து வேறு நபர் ஆஜராக மாஜிஸ்திரேட் அனுமதி அளித்தார்.

12-வது சாட்சி

12-வது பிராசிகியூஷன் சாட்சியான சங்கரநாராயணன் பிறகு விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் புதுக்கிராமத்தில் வசித்து வருகிறேன்; என் வீடு பெருமாள் கோவிலுக்கு வடக்கே இருக்கிறது;

"ஜூலை 15-ம் தேதி காலை 10 மணிக்கு ரோடின் வடபுறத்திலிருந்து கோவிலை நோக்கி சென்றுகொண்டிருக்கையில், தென்புறத்திலிருந்து தடிகள், அரிவாள்கள் சகிதம் சுமார் 50 பேர் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன்; அவர்கள் 'ஆச்சாரியார் ஆட்சி ஒழிக, நேரு சர்க்கார் ஒழிக, பிராமணர்களை வெட்டிக் கொல்லுங்கள்,' என்ற கோஷங்களை எழுப்பிக்கொண்டு வந்தனர்."

"இதைக் கண்டு கதவுகளை வீட்டினுள் உள்ள பெண்கள் பற்றி நான் கவலைப்பட்டேன்; நான் வீடு சென்று பெண்களை வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு, கதவுகளைத் தாளிட்டுப் பூட்டிவிடுமாறு எச்சரித்தேன். நான், என் வீட்டுக்கு முன் நின்றுகொண்டிருந்தேன்."

"ஒரு கூட்டம் கோவில் அருகே வந்தது; 10 அல்லது 15 பேர் கொண்ட கூட்டம் என் வீட்டை நோக்கி; 'வெட்டுங்கள், கொல்லுங்கள்,' என்று கோஷமிட்டு ஓடி வந்தது; என்னை கூட்டத்தினர் சூழ்ந்துகொண்டனர். அவர்களிடம் அரிவாள்கள், தடிகள் இருந்தன; அவர்களில் சிலர் என்னைத் தடியால் தாக்க முயற்சித்தனர்; எனக்குச் சேதம் காயமேற்பட்டது; நான் பின்புறம் திரும்பிக்கொண்டு அடிகளைத் தடுத்தேன்."

"கூட்டத்தில் ஒருவர், என் கழுத்தை அரிவாளால் வெட்டக் குறிவைத்தார்; நான் அதைத் தடுத்தபோது என் வலக் கையில் காயமேற்பட்டது; மீண்டும் அவர் என்னை அரிவாளால் வெட்டக் குறிவைத்தார்; இதைச் சமயம் இடது கையால் தடுத்தேன்; இடது கையிலும் கைய

காயமேற்பட்டது; மேலும் வெட்டு விழும் என்ற பயத்தால், காம்பவுண்டு சுவர் மீது ஏறிக் குதித்து, தெருவழியே கிழக்கு நோக்கி ஓடினேன்; வடக்கே சென்று ஒரு சிறிய சந்து வழியாக என் வீட்டின் பின்புறத்தை அடைந்தேன்; அதன் சமீபத்தில் ஒரு எண்ணெய்க் கடை இருக்கிறது. அக்கடை அப்போது மூடப்பட்டிருந்தது.

"கடையின் முன் மாரிமுத்து தேவர் நிற்பதைப் பார்த்தேன்; என் காயங்களை அவரிடம் காட்டினேன்; அவை எவ்வாறு ஏற்பட்டன என்றும் அவரிடம் கூறினேன்."

"அவர் காயங்களைத் துணியினால் கட்டி என் வீடு வரை பின்தொடர்ந்து வந்தார். பிறகு முத்துசாமி அய்யர் என்பவர் வந்து காயங்களுக்கு மருந்து போட்டார்; பிறகு ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்; பிறகு தெற்கு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் ஒன்றைத் தாக்கல் செய்தேன். (புகார் மனு எக்ஸிபிட் பி 2-ல சாட்சி தம் கையெழுத்தை அடையாளம் காட்டினார்.) மறுதினம் என்னை போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரித்தார்; என்மீது அரிவாள் வீசியவரை நான் அடையாளம் காட்ட முடியும்."

"பிறகு சாட்சி அவர்களை அடையாளம் காட்டினார். முதலில் 90-வது எதிரியைக் காட்டி, பிறகு 91-வது எதிரியைக் காட்டி, அவர்தான் அரிவாள் வீசியதாகக் கூறினார்; 92, 93-வது எதிரிகள் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தனர் என்றும் சாட்சி அடையாளம் காட்டினார். அந்த எதிரிகளை, சாட்சி தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் முன்பும் அடையாளம் காட்டினார்."

குறுக்கு விசாரணை

திரு எம். செல்லையப்ப பிள்ளை சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"பிற்பகல் சுமார் 1-45 மணிக்கு நான் போலீசாரிடம் புகார் தாக்கல் செய்தேன்; சம்பவம் பற்றிய எல்லா விவரங்களையும் அதில் குறிப்பிடவில்லை."

"இதற்கு எவ்வித காரணமும் இல்லை."

"50 பேர் தடிகள், அரிவாள் சகிதமாக வடக்கே ஓடிவந்ததாக நான் புகாரில் கூறவில்லை."

"கூட்டம் வடக்கேயிருந்து வந்தபோது பெருமாள் கோவில் முன் நின்றுகொண்டிருந்ததாக நான் புகாரில் குறிப்பிடவில்லை; வடக்கேயிருந்து கூட்டம் வந்தபோது, நான், கோவில் முன் சுமார் 10 நிமிடம் நின்றுகொண்டிருந்தேன்; சம்பவம் நடந்தபோது, என் வீட்டின் முன் சுமார் 5 நிமிடம் நின்றுகொண்டிருந்தேன். இந்த 15 நிமிட நேரத்தில் புதுக்கிராம வாசிகள் யாரையும் நான் சந்திக்கவில்லை; சம்பவம் நடந்த பிறகும் யாரையும் சந்திக்கவில்லை; அன்று பகல் 2 மணிக்குப் பிறகே நான் காயமுற்றதாக புதுக்கிராம மக்க

ளுக்குத் தெரியவந்தது; என் வீட்டின் முக்கிய வாயில் பூட்டப்பட்டது; என்னைப் பற்றி எனக்குப் பயம் ஏதுமில்லை; என் வீட்டில் உள்ள பெண்கள் பற்றியே பயப்பட்டேன்; புதுக்கிராமவாசிகள் அனைவரும் தங்கள் வீட்டு வாயில்களைப் பூட்டிவிட்டனர்; என் வீட்டின் காம்பவுண்டு சுவர் திறந்திருந்ததோ தெரியும். காயமடைந்த பிறகு அவ்வழியே நான் வரவில்லை."

"புகாரில், 15 பேர் என்னை நோக்கி ஓடி வந்ததாகவோ, தடிகள் வைத்திருந்ததாகவோ குறிப்பிடவில்லை; 15 பேர்கள் கொண்ட கூட்டத்தில் 3 பேரிடம் அரிவாள்கள் இருந்தது எனக்குத் தெரியவந்தது; அரிவாளால் கைகளில் வெட்டுண்டதாக புகாரில் கூறவில்லை; பொதுவாக எனக்குக் காயமேற்பட்டிருந்ததாகவே குறிப்பிட்டேன்."

"இடது கையின் உதவி மூலம் காம்பவுண்டு சுவர் ஏறி குதித்தேன்; இதுபற்றி நான் புகாரில் குறிப்பிடவில்லை; சந்து வழியாக, வீட்டின் பின்புறத்திலிருந்த எண்ணெய்க் கடைக்குச் சென்றதாகவோ, மாரிமுத்து தேவர் பற்றியோ, முத்துசாமி அய்யர் பற்றியோ புகாரில் குறிப்பிடவில்லை; என்னை வெட்டியவரை நான் சுட்டிக் காட்ட முடியுமென்று குறிப்பிட்டேன்."

திரு பி. எ. தங்கவேலுசாமியால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"வெட்டுவதற்கும், குத்துவதற்கும் இடையே உள்ள வித்தியாசம் எனக்குத் தெரியும்; என்னைக் குத்தியதாக நான் சப்-மாஜிஸ்திரேட்டிடம் கூறவில்லை; நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டரால் விசாரிக்கப்படுவதற்கு முன் என் வீட்டின் கதவுப்புறத்தில் இருந்த ரத்தக்கறைகள் தண்ணீரால் கழுவப்பட்டுவிட்டது; என்னை அரிவாளால் தாக்கிய எதிரியை நான் பார்த்தேன்."

திரு வி. என். கந்தப்பனால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"நான் வீட்டிற்குள் சென்றபோது காலை 10-30 மணி இருக்கும்; அதன் பிறகு முத்துசாமி அய்யர் வந்தவுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்; அப்போது என்னுடன் போலீசார் யாரும் வரவில்லை."

திரு. ஆர். தண்டபாணியால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"என் துணிகளில் ரத்தக்கறை இருந்ததாகவும், கூட்டத்தினர் சபதம் செய்துகொண்டு வந்ததாகவும் நான் புகாரில் குறிப்பிடவில்லை."

திரு செல்லையப்ப பிள்ளையால் மீண்டும் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"நான், தடியால் அடிக்க

பட்டதாக டாக்டரிடம் கூறவில்லை."

★

13-வது சாட்சி

13-வது பிராசிகியூஷன் சாட்சி மாரிமுத்து தேவர் அடுத்தபடியாக விசாரிக்கப்படுகையில் கூறியதாவது:—

"நான் புதுக் கிராமத்தில் வசித்து வருகிறேன்; தனியாகக் கடை ஒன்றில் நான் வேலை பார்க்கிறேன்; என் வீடு பெருமாள் கோவிலுக்கு வடக்கே இருக்கிறது; கிழக்குப் புறத்தில் என் வீட்டின் சமீபத்தில் ஒரு எண்ணெய்க் கடை இருக்கிறது; வடக்கேயிருந்து 30 பேர் ஓடி வருவதைக் கண்டேன்; கொஞ்சநேரம் கழித்து 12-வது பிராசிகியூஷன் சாட்சி சங்கரநாராயணன் இரு கைகளிலும் ரத்தக் காயங்களுடன் அங்கு வந்தார்; காயங்கள் எப்படி ஏற்பட்டன என்று அவரைக் கேட்டேன்; கூட்டத்திலிருந்தவர்களால் காயம் ஏற்பட்டதாக அவர் கூறினார்; நான் துணியைக் கொண்டு காயங்களைக் கட்டினேன்; அவரை அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றேன்."

திரு எம். செல்லையப்ப பிள்ளையால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"சங்கரநாராயணனுக்கு கட்டுக் கட்டுகையில், அவர் பக்கத்தில் ஒரு பையன் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்தேன்; அவன் பெயர் மாரிமுத்து என்றும், வயது 15 இருக்குமென்றும், அவருடன் சங்கரநாராயணன் பேசினார் என்பதும் எனக்குத் தெரியாது."

"சங்கரநாராயணன் வெள்ளை சட்டை போட்டுக்கொண்டிருந்தார்; அவர் மேல் துண்டு போட்டிருந்தாரோ கவனிக்கவில்லை, அவர் வேஷ்டியிலும், சட்டையிலும் ரத்தக் கறைகள் காணப்பட்டன; என்னுடைய பழைய வேஷ்டி ஒன்றைக் கொண்டு காயங்களைக் கட்டினேன்; அதில் வளர்ந்த குரியன் என்பது எனக்குத் தெரியாது; சங்கரநாராயணனை எனக்கு 4 அல்லது 5 வருடங்களாகத் தெரியும்; இச்சம்பவத்தைப் பற்றி நான் யாரிடமும் கூறவில்லை; என் வீட்டில் அப்போது பெண்கள் இல்லை."

"நான் கொல்லத்து வேலை செய்கிறேன்; மாதத்திற்கு 15 நாட்களுக்கு எனக்கு வேலை கிடைக்கும்; இந்த வருமானத்தைக் கொண்டே ஜீவித்து வருகிறேன்; சம்பவம் நடந்த தினத்தன்று வேலைக்குச் செல்லவில்லை."

திரு பி. எ. தங்கவேலுசாமியால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"வேலை எங்கு கிடைத்தாலும் அங்குச் செல்வேன்; எனக்கு தி. மு. கழகத்திடமோ, காங்கிரசிடமோ, அல்லது வேறு கட்சியிடமோ அனுதாபம் கிடையாது."

★

14-வது சாட்சி

14-வது பிராசிகியூஷன் சாட்சி மாரியப்பன் பிறகு விசாரிக்கப்படுகையில் கூறியதாவது:—

"நான் சலவைத் தொழில் செய்கிறேன்; ரயில்வே பாலத்தின் தென்புறத்திலுள்ள பக்கிள் கால்வாயில் துணிகளை வெளுப்பதுண்டு; சுமார் 4½ மாதங்களுக்கு முன் நான் அக்கால்வாய்க்கு துணி வெளுப்பதற்காகச் சென்றேன்; துப்பாக்கி வெடிச் சப்தங்களைக் கேட்டேன்; 10 நிமிடம் கழித்து ஒரு டிரெயின் வந்து 3-வது கேட்டில் நின்றது; 5 நிமிடம் கழித்து துப்பாக்கி வெடிச் சப்தத்தைக் கேட்டேன்; சுமார் 500 பேர்கள் டிரெயினின் பின் சென்றனர்; அவர்கள் ரயில்

பாதையில் உட்கார்ந்து கொண்டனர்; பிறகு ரயில்வே பாலத்தின் மீது உட்கார்ந்து கொண்டனர்; சிறிது நேரம் கழித்து பாலத்திலிருந்து புகை வந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன்; சிறிது நேரம் கழித்து கூட்டம் கலைந்து சென்றது; அரைமணி நேரம் கழித்து தீ அணைக்கும் என்ஜின் வந்தது; ரயில்வே பாதையின் அருகே நான் செல்லவில்லை; 2 நாட்கள் கழித்து என்னை போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரித்தார்."

திரு எம். செல்லையப்ப பிள்ளையால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"பக்கிள் கால்வாய்க்கும் 2-வது கேட்டுக்கும் இடையே 3 அல்லது 4 பர்லாங் தூரம் இருக்கும்; பாதையிற்கும், 3-வது கேட்டிற்கும் இடையே 1½ பர்லாங் தூரம் இருக்கும்."

இத்துடன் இன்றைய விசாரணை முடிவடைந்தது.

கழகக் கூட்டம்

★

இராயநல்லூரில்

11—12—53 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு

தலைவர்: ஆர். பாலகுருசாமி

பேச்சாளர்கள்:

சி. பி. சிற்றரசு
எல். என். இராமலிங்கம்
போ. சொக்கலிங்கம்
ஆ. இராமசாமி

காஞ்சியில்!

★

சிறை சென்று மீளும் தோழர் கே. எ. மதியழகன் அவர்களுக்கு, 12-12-53 அன்று வரவேற்பு அளிக்கப்படும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை கலந்து கொள்வார்.

★

வரவேற்பு கூட்டம்

10—12—53 வியாழன் மாலை 5-30 மணிக்கு, கான்ரான்ஸ்மித் மைதானத்தில் (திருவிக திடலில்) சிறைமீண்ட மாணவர் தலைவர் தோழர் மதியழகன் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும். தோழர்கள் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர் பேசுவர்.

குறிப்பு: தி. மு. கழகம் 23-வது வட்டக் கிளைக்கழகச் சார்பில் பாராட்டுக் கூட்டம் நடத்தப்படுகிறது.

★

திண்டுக்கல் தி. மா. மு. கழக செயற்குழு கூட்டம்

"11—12—53 வெள்ளி மாலை 5-30 மணிக்கு திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். தோழர் கன்னதாசனின் போராட்ட வரவு செலவு பரிசீலனைக்குப் பின், புதிய செயற்குழு அமைக்கப் படும். ஆகவே, உறுப்பினர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்," என்று தோழர் மு. க. சண்முகம் அறிவிக்கின்றார்.

முல்லை—வடிவேல் அறிவிப்பு

முல்லை கொரம்பை, டிச. 7—

"எனது உடல்நிலையின் காரணமாக் மணியம்பாடி நகர தி. மு. கழகச் செயலாளர் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்பதை பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்."

தமிழுக்கும், தமிழ் வரலாற்றுக்கும் வாசன் செய்த மாபெரும் துரோகம்

—(0)—

“‘ஔவையாரை’க் கண்டு தமிழ் - ஆய்வுத்துறை உலகமே நகையாடும்!”

அண்ணாமலை பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் சிதம்பரநாதனார் கண்டனம்

அண்ணாமலைநகர், டிச. 5—

“சங்கப் புலவர்களின் பெருமைக்கு இழுக்கு ஏற்படும் வகையில் காண்பிக்கும் ‘ஜெமினி ஔவையார்’ அறிவுக்கு ஒவ்வாத காட்டுமிராண்டிப் படம்—இது ஓர் படமாகுமா? ‘ஜெமினியின் ஔவையாரை’க் கண்டு, தமிழ் ஆய்வுத்துறை உலகமே எள்ளி நகையாடும்.”

“உலகம் போற்றும் திருக்குறளை, ‘சங்கத்திலே, அரங்கேற்ற உதவியவர், ‘இந்த ஔவையார்’ என்று காட்டப்படுவதைப் பார்த்து, தன்மானமுள்ள எந்தத் தமிழனும் அதைப் புகழ்ந்து பாராட்ட மாட்டான்.”

“வேண்டுமென்றே பொய்யாகப் புனைந்து உரைத்து—‘வள்ளுவன், ‘ஆதி’ என்ற சண்டாளச்சிக்கும், ‘பகவன்’ என்ற பார்ப்பனனுக்கும் பிறந்தவன்’—என கதைகள் கூறி விடப்பட்டிருக்கின்றன. இதைக் கொண்டு, வள்ளுவனுக்கு அறிவு வந்ததற்குக் காரணம், ‘பகவன்’ என்ற பார்ப்பனன் சேர்க்கையால்தான் என்ற கருத்தை, இடைக்காலத்திற்குப் பின் பரப்பிவிட்டனர்; ‘இது முற்றிலும் தவறு,’ என மறுத்து, உண்மை நிலையை விளக்கியவர் சோமசுந்தர பாரதியாரவர்.”

“ஔவையும், வள்ளுவரும் உடன்பிறந்தவர்கள் என்பதற்குச் சங்க இலக்கியங்களிலேயே சான்று எங்கும், எப்போதும் அகப்படாதிருக்க, இவர்கள் மட்டும், அவர்கள் பிறப்பு முறையை எவ்வாறு கண்டுபிடித்தார்கள்?—அடிப்படையிலேயே தவறு இருக்கிறது. ‘சங்ககால ஔவையாரு’க்கும், ‘ஜெமினி ஔவையாரு’க்கும் எவ்வளவோ முரண்பாடுகள் காணப்படுகின்றன.”

“திருக்குறளை சங்கத்திலே அரங்கேற்ற வந்தபோது, சங்கத்தினர், ‘குறள் இரண்டடி வெண்பாவாக இருக்கிறது; எனவே, சங்கத்தில் அரங்கேற்ற இசைவு தரோம,’ என சங்கப் புலவர்கள் வாதாடுவதாகக் காட்டப்படுவதை யார் பொறுக்க முடியும்? ‘சங்கப் புலவர்கள், சங்க இலக்கணம் அறியாதவர்கள்,’ என்றுதானே பாமர மக்கள் தப்புக் கணக்குப் போடுவர்?

“‘சங்கத்திலே, இரண்டு அடியால் வெண்பா இயற்றுதல் கூடாது,’—என்ற வரையறை விதி இருந்ததாகக் கூறுவதற்கு, இவர்கட்கு எங்கே ஆதாரம் கிடைத்தது?”

“‘வெண்பா இரண்டு அடியால் இயற்றப்பெறலாம்’ என தொல்காப்பியத்திலேயே, வெள்ளிடை மலைபோல சான்றிருக்கிறதே! சங்கப் புலவர்களுக்கு, அது தெரியாதா, என்ன?’

—தமிழ் இலக்கியக் கழக ‘முத்தமிழ்’ கோவைச் சொற்பொழிவு 26—11—53-ல், கோகலே மண்டபத்தில் நடைபெற்றபோது, பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் தமது தலைமை உரையை ஆற்றுகையில், மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

“‘இயல், இசை, நாடகம்’ என்று முத்துறை உடையதாக இருந்த தமிழ், இன்று, ‘இயல், இசை, நாடகம், சினிமா’ என்று ‘நாற்றமிழ்’ ஆனது; இந் ‘நாற்றமிழ்’ சினிமாவை நீங்களும் கண்டிருப்பீர்கள்.

“‘கண்ணைக் கவரும் படம்; கருத்தைக் கவரும் படம்; உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் படம்; தமிழர் பண்பாட்டை விளக்கும் படம்,’ என தலைவர் விளம்பரப்படுத்தப்படுகிறது. இந்த நாற்றமிழ் ‘ஜெமினி ஔவையார்!’ அவள் ஔவையாரோ, அல்லது ஔவையாரோ? தமிழாசிரியனும் நானும், ஆய்வுத் துறை நண்பரும், தமிழ் மாணவர்களும் இந் ‘நாற்றமிழ் ஔவையார்’ பற்றி கவலைப்படுவதெல்லாம் ஏன்?—‘ஜெமினியின் புது கற்பனை சிருஷ்டி’ என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டோம். திருவள்ளுவன் பெருமைக்கு இழுக்கு தேடும் பொருட்டு, பாண்டியர் அவைக் களத்தில, ‘திருக்குறளை’ அரங்கேற்ற உதவியவர் ஔவையார் என்று ‘ஜெமினி ஔவையாரி’ல் காட்டியிருப்பதால்தான்!

அதிகாரிகள் போக்கு

விற்பனை வரி எதிர்ப்பு மாநாட்டில் கண்டனம்

திருச்சி, டிச. 6—

5—12—53-ல், திருச்சி தேவா மன்றத்தில், தோழர் எம். ஆர். வெ. விசுவநாதம் தலைமையில் பல கட்ட விற்பனை வரி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

தலைவர் தமது தலைமை உரையில், பல கட்ட விற்பனை வரியினை போராடும் அரசியல் அதிகாரிகள் வியாபாரிகளுக்குக் கொடுக்கும் எல்லையில்லாத தொல்லையை வன்மையாகக் கண்டித்து, வியாபாரிகள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமெனறார்.

தோழர்கள்: எம். வி. கோபால், ஏ. இராமசாமித் தேவர் மற்றும் பலர் பேசினர்

தோழர் அண்ணாமலை முத்துராஜா பேசுகையில், அரசாங்க அதிகாரிகள் வியாபாரிகளிடம் கடுமையாக நடந்துகொண்டு, குறைகளை எடுத்துச்சொன்னால் ‘அப்பீல் செய்து கொள்ளுங்கள்’ என்று கூறும் முறை கைவிடப்படாவிட்டால் வியாபாரிகள் வரி கொடா இயக்கம் நடத்தவேண்டுமெனறார்.

திருவெண்காடு தி. மு. கழக பொதுக் கூட்டம்

4—12—53 மாலை 6 மணிக்கு தோழர் இரா. இராமையா தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர் ஏ. பி. சிற்றரசு அவர்கள் விரிவுரையாற்றினர்.

1954 திராவிடர் டயரி

அழகான அமைப்பு சிறந்த காகிதம் —உயர்ந்த முழு கலிகோ பைண்டு

★

டயரியில், அண்ணாவின் பொன்மொழிகள், தி. மு. கழக வரலாறு அமைப்பு செயற்குழு, பொதுக்குழு விவரங்கள், கிளைக் கழகங்களின் விவரங்கள், பேச்சாளர் முகவரிகள், தபால், தந்தி கட்டணங்கள். பத்திரப்பதிவு விவரங்கள், விற்பனை வரி, வருமான வரி விவரங்கள் உள்ளன.

500 பக்கம் — விலை ரூ. 1—0—0

சாதாரண தபாலில் அனுப்ப ரூ 1—2—0

பதிவுத் தபாலில் அனுப்ப ரூ 1—6—0

விற்பனைக் கழிவு 20/· செலவு தனி

முன் பணத்துடன் உடனே தேவைக்கு எழுதுங்கள்

“போர் வாள்” அலுவலகம்,

பவழக்காரத் தெரு, சென்னை—1.

தமிழ்நாடெங்கும் தூத்துக்குடி வாரம்

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க, ‘தூத்துக்குடி வாரம்’ கொண்டாடி, அந்தக் கூட்டத்தில், “தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யுமாறு சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி, அதை சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியாருக்கு அனுப்பியும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று; தூத்துக்குடி தோழர்களை விடுவிக்கக்கோரும் மனு ஒன்றை தயாரித்து, அதில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பி”யும் உள்ள கழகங்களின் பட்டியலும், நிகழ்ச்சியின் சுருக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. தீர்மானங்களும், கோரிக்கையும், கையொப்பத் தாளும் ஒரே நிகழ்ச்சியின் சம்பந்தப்பட்டவையாதலால், தீர்மானங்களைத் தவிர்த்து, கூட்ட நிகழ்ச்சிகளை மட்டுமே பிரசுரித்துள்ளோம்.

சென்னை 6-வது வட்டம்

5—11—53ல், நடைபெற்ற தூத்துக்குடி நாள் கூட்டத்திற்கு தோழர் ச. சிதம்பரம் தலைமை வகிக்க, தோழர்கள் திரவியன், ஞா. சோமு, இளம்பரிதி ஆகியோர் பேசினர். பின், தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சென்னை 30வது வட்டம்

21—11—53ல், தி. மு. கழகச் சார்பில், தோழர் என். எஸ். மூர்த்தி தலைமையில் கமிட்டி கூட்டம் நடைபெற்றது அது சமயம், தூத்துக்குடி சதி வழக்கு நமது கடமையும் என்பது பற்றி, பல தோழர்கள் பேசிய பின், தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சென்னை 4-வது வட்டம்

16—11—53ல், தோழர் டி. ஆர். சந்திரன் தலைமையில், சென்னை 4-வது வட்ட தி. மு கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஆட்சியாளருக்கு அனுப்பப்பட்டது.

விருதுநகர்

எம். எஸ். பெரியசாமி படிப்பகத்தின் சார்பில், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கக் கோரி பொது மக்களிடம் கையெழுத்து வாங்கி சென்னை முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

கலையம்புத்தூர்

தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யக் கோரியும், சதி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், சுமார் 240 கையெழுத்துக்கள் வாங்கி, ஒரு மகஜர் சென்னை முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

கொலாபா (பம்பாய்)

“ தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யும்படி, செயலாளர் தி. மு. கழகச் சார்பில், கையெழுத்து வாங்கி அதை, சென்னை முதலமைச்சர் அவர்கட்கு அனுப்பப்பட்டது” என்று செயலாளர் அறிவிக்கிறார்.

மதுரை

நகர தி. மு கழகக் கிளையின் சார்பில், தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யக் கோரி 1069 கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஒன்று சென்னை முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

• • •

பழைய குயவர்பாளையம் குமார நினைவு நிலையத்தின் நிர்வாகக் கூட்டம், 21-11-53ல், தோழர் அ. குருசாமி தலைமையில் நடந்தது. அதுசமயம், தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வடக்கூர்

தூத்துக்குடி டி. பு. அ. சவுந்திரபாண்டியன் தமிழர் சமதர்ம சங்க நிர்வாகக் கூட்டம் 26-11-53ல் தோழர் ஜி பாஞ்சோதி தலைமையில் தோழர்கள் ஏ. சொட்டைக்கண்ணு, எம எஸ பாலு, தாசன் ஆகியோர் பேசினார்கள்.

தேவாரம்

23—11—53ல், தோழர் ஆ பழனிபாண்டி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது அதுபோது, தோழர்கள் எஸ். முத்து, கே ஏ. கலியபெருமாள், நா. நடராசன், ஓ கிருஷ்ணமூர்த்தி, இளங்கோ, நெடுமாறன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தூத்துக்குடி தீர்மானங்களும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மார்த்தாண்டன்பட்டி

2—12—53ல், தி. மு கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சூலூர்

5 11-53ல், பெரியார் மைதானத்தில், தோழர் எஸ் கே. மருதாசலம் தலைமையில் தி மு கழகச் சார்பில் தூத்துக்குடி நாள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் எஸ். அற்புதசாமி, முத்து மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

திட்டக்குடி

25—11—53ல், இளங்கோ மன்றத்தில் நடந்த தி. மா. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திமிரிக்ராசாயல்

6—11—53ல், தோழர் எஸ் செல்லபெருமாள் தலைமையில், தி மு. கழக நிர்வாகக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மம்சாபுரம்

தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று, அதில் சம்பந்தப்பட்டுள்ள தோழர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரி சென்னைப் பிரதமரைக் கேட்டுக் கொண்டு மம்சாபுரம் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் கே. எம். பி சண்முகசுந்தரம் அவர்களால் தந்தியும், பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்கள் அ. கன்னியப்பன், மு அய்யனார் ஆகியவர்களால் கடிதமும் பொதுமக்கள் சார்பில் கையெழுத்து மகஜரும் அனுப்பி வைக்கப்பட்டது.

செஞ்சீனா: ஐ. நா. மெம்பர்!

அமெரிக்கா இனி எதிர்க்காது!

லண்டன், டிச. 9—

செஞ்சீனா, அடுத்த வசந்த காலத்திற்குள் ஐ நா. சபையில் மெம்பராகும் உரிமையை, அமெரிக்க ஏற்றுக்கொள்ளும் என்று தெரிகிறது

இதற்கு, ஐசன்ஹோவர் சம்மதத்தை, சர்ச்சில் பெற்று விட்டதாகத் தெரிகிறது.

சீனாவை, ஐ நா. மெம்பராகச் சேர்க்க வேண்டும் என்ற பிரச்னையை பிரிட்டனே கொண்டு வரும் என்றும், அமெரிக்கா இதை ஆட்சேபிக்காதென்றும் சொல்லப்படுகிறது.

ஜாப்—பாக். வர்த்தகம்

ஜப்பான், பாகிஸ்தானிடமிருந்து பருத்தியைப் பெற்று, இயந்திரச் சாமான்களை பதிலுக்குத் தரும் என்று, பாகிஸ்தானிலுள்ள ஜாப் ஸ்தானிகர் அறிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டுபெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இ. வி. அண்ணாதுரை, எம். ஏ.